ராம

V. S. கன்னையா பாவலர் இய

பழமதுரை

# பாண்டிமுனி வர்ணிப்பு.



ஜீ. இராமசாமிக்கோன்

புத்தகசாலை 4 குருசாமிக்கோனார் தெரு வடக்குமாசிவீதி

மதுரை.

சிவமயம்

பழமதுரை

# பாண்டிமுனி வர்ணிப்பு

## விநாயகர் துதி வெண்பா.

பாரோர் புகழுமுயர் பாண்டிமுனி கற்கதையைச்
சீரார் தமிழில்யான் செப்புதற்கு—நேரார்
அரிமருகனான அமல மெஞ்ஞான
கரிமுகவன் பொற்பதமே காப்பு.

## கதை வரலாறு.

பாண்டிமுனி ஈஸ்வரன்மேல் பாடியதோர் வர்ணிப்பைப்
பாருலகோர் தான்தெரிய
வேண்டியே யானதனை விளம்புகிறேனெவரும்
விபா மறிந்திடவே
சிற்றுமுன் றடைப்புநகர் கன்னையா பாவலரும்
செந்தமிழா விப்புவியில்
ஏற்றுடனே யமைத்த பாமுனி வளப்பமதைப்
பகருகிறே னிச்சபையில்
வீற்றிருக்கும் யாவர்களும் அன்புட னானிங்கு
விளம்புஞ்சொற் பிழையிருந்தால்
கேட்டுமிகப் பொறுத்து மனமகிழ்ந் தென்னைக்
கிருபையுட னாதரிப்பீர்
ஆதியில் மதுரைநகர் ஆண்டகுல சேகரனும்
ஆலவாய்ச் சொக்கருக்கு
நீதியாய்க் கோவிலுடன் நெடியவுயர் கோபுரமும்
நேர்த்தியாய்த் தானமைக்க

…ம் திருப்பண…

…னருளால்

…டனே வந்திடுவாய் முனியென்று
…ட்டார் தூதுவரை

…னமே தூதுவரும் முசண்டகிரி வனஞ்சென்று
அதிவீர மாமுனியை

---

…க்ஷமுட னடிபணிந்து பாண்டியன் விடுத்தசெய்தி
பகர்ந்தார் விபரமதாய்

வந்தழைத்த தூதுவரின் வார்த்தை தனைக்கேட்டு
வள்ளல்வள நாட்டுமுனி

சிந்தை மகிழ்வாகப் பூதப் படைகளுடன்
சென்றார் திசைநோக்கி

மாமுனியுந் தானடந்து மலைவனங்கள் விட்டகன்று
மாபெரும் நதியருகே

க்ஷேமமுடனே துலங்கும் சோளநகர் கடந்து
சேர்ந்திலங்கும் வடகரை

கண்ணுற்று மாமுனியும் கன்னிகை மீனும்பிகைவாழ்
கடம்பவனக் க்ஷேத்திரத்தில்

விண்ணை யளாவியதோர் சோலைதனில் புகுந்து
விளங்குகின்ற ஈஸ்வரியை

வந்துமன மகிழ்வாய் ஆதிமீனாக்ஷிதன்னை
வணங்கியே மாமுனியும்

செந்திருமால் தங்கையெனும் திரிசூலி கபாலி
தேவிபரா சக்தியிடம்

அவசரமா யித்தருணம் பூதப் படைகளுடன்
அழைத்துவரச் சொன்னதொரு

விபரமதை யான்தெரிய அடியேன் றனக்குநீ
விளம்புவா யிதுசமயம்

என்றுசொன்ன மாமுனியின் வார்த்தை தனைக்கேட்டு
இன்பமுட னம்பிகையும்

நன்றியுப சாரமது செய்துமா முனிதனக்கு
நவின்றாள் விபரமதை

த் ே

க
வேண்டியே காவலது மே வதற்காய்நினைத்தான்
விறுடியிலே செல்லென்னவே

வீரச் சடைகுலுங்க மலையாள மாமுனியும்
விளங்கும் பழமதுரை

சீருடனே வந்துமேதான் பாண்டியனைக் கண்டு
சீக்கிரத்தில் கூறெனவே

கேட்டுமே பாண்டியனும் ஆனந்தங்கொண்டு
கிருபையுட னேதுசொல்வார்

நாட்டார் புகழ்ந்திடவே என்மனம் போலாக
நடத்திவைப்பாய் திருப்பணியை

இடம்பொருள் ஏவலுடன் எல்லா வசதிமிகும்
இந்தப் பதிதனிலே

கடம்பவன நடுவே சிவலிங்க முண்டாந்தக்
காரணமா மவ்விடத்தில்

திருப்பணியுக் கோபுரமும் நான்கு திசையினிலும்
திருமதில் சிங்காரமதாய்

விருப்பமுட னேயமைத்து உனைக்காவல் வைக்க
வேண்டுமென்று நானினைத்தேன்

கண்யமுடனே முடித்துப் பூதங்களோடுஅதில்
காவல் செய்வாய் இன்றுமுதல்

என்னாளும் பூர்த்தியதாய் இப்பதியி லேயிருந்து
எங்களை நீ காத்திடுவாய்

எத்தனையோ காலமுதல் பிள்ளைக ளில்லாமல்
இருக்கின்ற பேர்களுக்கு

உத்திரவு நீ கொடுத்து பஞ்சாட்சர மீய்ந்து
உண்மையுடன் காத்திடுவாய்

ஆண்டிமுனியேஉனக்கு அபிஷேகப் பூஜைமிக
அன்புடனே செய்வதற்கு

வேண்டியதோர் மானிபங்கள் அழியா திருந்திடவே
விருப்பமதாய்ச் செய்திடுவேன்

லாம்படைத்து

த்தியம் பாண்டிப்பூசாரியவர்

யுடனேநடத்த

செய்திடுவேன் உலகத்தோர் கொண்டாட

உறுதியுடன் நீயிருந்து

ஊத்தேச மானிடர்க்கும்கேட்டவர மீய்ந்து

இடர்தீர்த்து வைத்திடுவாய்

பாண்டவர்க ளுன்னை துவாபரயுகத்தில்

பகர்ந்தார்க ளாண்டியென்று

பாண்டியன்தேசமதில்நீ பரிவாகவந்ததினால்

பாண்டிமுனி யென்று சொன்னேன்

தெரிந்துகொள்வாயெனவே பாண்டியனுறைத்ததோர்

செய்திதனைக் கேட்டவுடன்

சரிசரியென் றேபாரச் சடாமுனியுஞ் சிந்தையது

சந்தோஷங் கொண்டெழுந்து

அட்சணமேஅம்முனியும் ஆயிரம்பூ தங்களோடு

அமர்ந்தார் கடம்பவனம்

லட்சமாய் ஆலயமுங் கோபுரமுந் தானமைத்துப்

பாவனையாய்க் காவல்செய்தார்

ஆலயமுங் கோபுரமும் அமைந்ததுதெரிந்து

அகமகிழ்ந்து பாண்டியனும்

சீலமுடன் மாமுனிவர் சிலையொன்று தான்செய்து

சீராய் முடிப்பதற்கு

சரியான கற்களினால் சமர்ப்பிக்கவேசிற்ப

சாஸ்திரிகள் வேண்டுமென்று

பாரினில் தேடிநல்ல பாட்டாளி கூட்டிவந்து

பாண்டியுருவே யமைத்து

நாலுகால் தூணிருத்தி நல்லதோர் தினம்பார்த்து

நலமுடனே தானெடுத்து

கோலா கலமுடனே குவலயத்தோர் கொண்டாடக்

கொண்டு வைத்தா ரச்சிலையை

அத்தப்பூரீ துணையாக

அருகினில் சமையன் சாமிசிலை தனைநிறுத்தி
ஆகமப்பிர திஷ்டை செய்து
சமயத்தெய்வமிது சாஸ்திரமுடி யானதென்று
சங்கிலிகள் கொண்டுவந்து
விமரிசையாய் மாந்தர்களும் விலங்கடித் தவர்காலில்
வீற்றிருக்கச் செய்தனரே
ஊரெல்லாங் கூடிநன்றாய் உயர்ந்த சடையாண்டிக்கு
உற்சவம் நடத்துதற்கு
பாரெல்லாந் தானறிய பறைகூறச் செய்தார்
பாண்டிகுல சேகரனும்
மாமுனிவ ராண்டிக்கு மாசிக்களரியதில்
மாபதியோர் தான்கூடி
நேமமுடன் பொங்கல் வைத்து கைவேத்தி யங்கள்மிக
நேர்மையுடனே கொடுக்க
கந்தபரி மளப்பூஜை கனிவுடன் தானேற்றுக்
காத்திடுவே னென்றுவமர்
வந்திலங்கும் மானிடர்க்கு வரங்கள் மிகக்கொடுத்து
வாழ்ந்தார் பழமதுரை
ஆண்டிமுனி ஈஸ்வரரும் அன்றுமுதல்இன் றுவரை
ஆடாத பேய்கள் தன்னை
வேண்டியே தான்விரட்டி தன்னைப் பணிந்தவர்க்கு
வேண்வரமே கொடுத்தார்
இப்படியே தானிருக்கப் பிற்காலந் தன்னில்
ஏழியனொரு மூப்பனென்போன்
செம்பமுடனேயிருக்க அன்னவனைச்சொர்ப்பனத்தில்
சீருடனே தானெழுப்பி
வருவாய் பழமதுரை எந்தனைநீ கண்டு
வாகாய்ப் பணிந்துவந்தால்
தருவேன் தனம் அருளும் என்றுமுன் னுரைத்தபடி
தான்கண்டு சாமிதன்னை

பூரணமாய்

...னே அபிஷேகம் பெற்று

...ருந்திடவே

## ...மாமுனி கோவில் அலங்காரச் சிறப்பு)

...ருகண் பார்வையது உச்சிச்சடை ஆண்டிக்கு
உயர்ந்தமொட்டைக் கோபுரமாம்

மறுகண் பார்வையது சன்னதியில் வந்தவர்க்கு
மகிழ்ந்தருள் புரிந்திடுமாம்

நெற்றியிற் பொட்டுமிட்டு நேர்கிழக்குப்பார்வையுடன்
நேமநிஷ்டை தன்னுடனே

வெற்றிபெறவே நினைந்து வீரமாமுனிவருமே
வேணசிங் காரமதாய்

மாவிருட்சந் தான்சிறந்த பழமதுரை தன்னில்
மாமுனிவ ரருள்பெருகும்

கோவில் சிறப்பதனை ஆதிசேட னாலுங்
கூறமுடியா தெனவே

வானையலாவிநிற்கும் கோவில் அருகினிலே
மாதென்னை சோலைகளும்

ஞானமது தான்சிறந்த பாண்டிமகாமுனியும்
நல்வரங்க ளேதருவார்

தேங்காயின் நீரதுபோல் கிணறொன் றருகினிலே
தேனமிர்தம் போலிருக்க

பாங்காய்ப் பூசாரியவர் பாண்டியெனும் போதை
பக்தியரு ளாடுகின்றார்

பன்னீரால் சாற்றி (முனிவருக்கு) பாவையர்கொண்டாடுவதும்
பலருடுக்கு தனையடித்து

எண்ணிறைந்த ஜனங்களுக்கு இயம்பிடுங்குறியமுசம்
எங்கினுமிவ் வாறறியேன்

பந்தலலங் காரமுடன் பாண்டி முனிதனக்கு
பழந்தேங்கா புஷ்பமதும்

[illegible]

ஏந்திநிற்பார் கூட்டமுடன்

பண்டாரக் கோஷ்டிகளும் பலகாரம்விற்பவரும்
பக்கம் பழக்கடையும்

பாண்டிமுனி சன்னதியில் பண்புடன் துலங்கியருள்
பாவையர் நின்றுடுவதும்

பக்தியுடன் பெண்கள் வந்து பாலன்வரங் கேட்டுமிக
பக்குவமாய்ப் பொங்கல்வைத்து

சத்திக் கிடாய்கள்வெட்டி சமையன் சாமியதற்கே
சாவல் பலிகொடுப்பார்

கிடாவெட்டித் தலையதுவுங் கீழேவிழுந்தவுடன்
கிட்டநின்று பூசாரி

சடையன் தானெடுத்து சமையன்சாமிமுன்பு
தனக்காக வைத்திடுவார்

வாரம் இருமுறைநாள் பாரமுனி ஆலையத்தில்
வரும்வெள்ளி செவ்வாயில்

நேரிழை மார்களெல்லாம் நீரில் முழுகிவந்து
நேர்த்தியுடன் குலவையிட்டு

அவனிதனில் பாண்டியனை அடிபணிந்து தான்வணங்கி
அவரிடங் குறைகூறில்

பலவினையும் நீங்கியேதான் பண்புடனே நல்ல
பலனடைவார் நிச்சயமே

பேயாடி நிற்பவரும் பிணிகொண்ட பேயர்களும்
பிள்ளைவரங் கேட்பவரும்

ஓயாமல் சப்தமிடும் ஓசைதனை முனியறிந்து
உத்திரவு தந்திடுவார்

சிந்தையது மகிழ்வாய் ஆண்டி முனியீஸ்வரும்
சிலமாதர் தன்னிடத்தில்

விந்தையா யருளாடும் வேடிக்கை தான்பார்த்து
வேண்டும்வரமே கொடுப்பார்

பிள்ளையுந் தொட்டிலுமாய் பெயரிட்டழைப்பதும்
பெரியண்ணன் பூசாரி

...யந்தபடி ... கப் ...ரம்
...கதுயர் தீர்த்திடுவார்

...மையழி யாதபடி மாதுமக்கள் தன்னுடனே
வண்டியூர்க் கலுங்கடியில்

தளராமல் தான்குழித்து பாண்டிமுனி யிருக்கும்
சன்னதிக்கு முன்புவந்து

ஆடம்பரத்துடனே அபிஷேக முங்கொடுத்து
அடிபணிந்து அம்முனியை

பாடகர்கள் பாடிநிற்க அங்குவந்த பேர்களுக்குப்
பதங்கொடுக்கப் பூரணமாய்

வைகாசி மாதமதில் வளரும் பிறைதனிலே
வந்திறங்கும் பால்க்குடத்தை

கைதனில் வாங்கிஆசான் பாண்டி முனிசிரசில்
கண்யமுடன் வார்த்திடுவார்

வெள்ளிசெவ்வா யன்று தினம் விரும்பியுனை யேநினைந்து
விரதங்கள் தானிருந்து

பிள்ளைவரம் தந்திடுவாய் பெயரிட் டழைப்போமென்று
பெண்களடி பணிவார்கள்

பாண்டிமுனி வர்ணிப்பை பாங்குட னிசைத்தவரும்
படித்தோருந் தான்வாழி

வேண்டியே இக்கதையைக் கேட்டோர்கள் வாழி
விபரமிதோ வாழியதே.

பழ மதுரை பாண்டிமுனி வர்ணிப்பு

முற்றிற்று.

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸ் மதுரை 1967, காப்பி 500.

...லிருந்து புதிதாயச்சு...

...ராணம் 1200. (அச்சில்)

| | | | | |
|---|---|---|---|---|
| | ,, | மணக்கோலம் 200, | | |
| . | ,, | கனகமணி 100, | | |
| 4. | ,, | வைத்தியக் கோவை 125, | 2 | 50 |
| 5. | ,, | வைத்தியத் திரட்டு 81, | | |
| 6. | ,, | மானிடர் கிறுக்குகள் என்னும் கிரிகை 64 ஆக ஐந்து சாஸ்திரங்கள் | | |
| 7. | ,, | கௌமதி நூல் 400. | 2 | 50 |
| 8. | ,, | தற்க சாஸ்திரம் 300. | 1 | 75 |
| 9. | ,, | கற்ப மூப்புக் குருநூல் 100, | | |
| 0. | ,, | மனோன்மணி தீட்சை 100, | | |
| . | | நாற்பத்துமுக்கோண பூஜை 41 சேர்ந்தது | 1 | 50 |
| | ,, | பூரணம் 216. | | |
| 3. | ,, | பூரணம் 205ம், | | |
| 14. | ,, | அதற்கு சூஸ்திரம் 21 சேர்ந்தது | 1 | 50 |
| 15. | ,, | பரிபாஷை 300. | 1 | 50 |
| 16. | ,, | பன்னிரு காண்டம். | 1 | 50 |
| 17. | ,, | பூஜாவிதி 200ம், | | |
| 18. | ,, | ஞான சைதன்யம் 51 சேர்ந்தது | 1 | 50 |
| 19. | ,, | வகார சூஸ்திரம் 200ம், | | |
| 20. | ,, | அதன் சுருக்கம் 100 சேர்ந்தது | 1 | 50 |
| 21. | ,, | தத்துவம் 300. | 1 | 75 |

ஷை 21 சாஸ்திரமும் சேர்ந்த கோர்வை (ஸ்டாக் இல்லை.)

இன்னும் அனேக புதிய சித்தர் சாஸ்திரங்களும் யாகோபு பாடிய நூல்களும் கிடைக்கும் நேரிலும் தபால் மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பக்கூடும்.

ஜி. இராமசாமிக்கோன்,

புத்தகசாலை 4 நிர் குருசாமிக்கோனார் சந்து

வடக்குமாசி வீதி மதுரை.